National University Polyclinics

# நோயாளி சாசனம்

## நாங்கள் உங்களைக் கவனித்துக்கொள்வோம்

தேசியப் பல்கலைக்கழகப் பலதுறை மருந்தகங்களில், எங்கள் நோயாளிகளின் நலனை மேம்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.
உங்கள் குடும்பத்துடன் நீங்கள் ஆரோக்கியமடைய உதவ விரும்புகிறோம்.

---

## எங்களிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கக்கூடியவை:

### நாங்கள் உங்களைத் தனிப்பட்ட முறையில் கவனித்துக்கொள்வோம்

- நாங்கள் உங்களுக்கு வழங்கும் கவனிப்பில் உங்களது தனிப்பட்ட பண்புகள், உடல்நிலை, மனநிலை, சமய நம்பிக்கைகள், கலாசாரப் பழக்கவழக்கங்கள், விருப்பப்படும் மொழி ஆகியவற்றை மதித்து நடப்போம்.

### நாங்கள் உங்கள் தனியுரிமையை பாதுகாப்போம்

- உங்கள் தனியுரிமையைப் பாதுகாக்கும் சுற்றுச்சூழலில் உங்களுக்கு சிகிச்சை அளிப்போம்.
- உங்கள் பராமரிப்பு பற்றிய அனைத்துத் தகவல்களையும் பதிவேடுகளையும் பத்திரமாகவும் இரகசியமாகவும் வைத்திருப்போம். சட்டப்படி பொறுப்பமைப்புகளுக்கு நாங்கள் தகவல் வழங்கவேண்டிய சூழ்நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

### உங்கள் சிகிச்சையைப் பற்றி நீங்கள் புரிந்துகொள்ள உதவி செய்து, உங்கள் முடிவை மதிப்போம்

- உங்களது உடல்நிலை, உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சை பற்றி உங்களுக்குப் புரியும் வகையில் விளக்கமாக எடுத்துச் சொல்வோம்.
- மருத்துவக் கவனிப்பை ஏற்கவோ அல்லது மறுக்கவோ நீங்கள் எடுக்கும் தீர்மானத்தை நாங்கள் மதிப்போம்.

### மருத்துவ ஆய்வில் பங்கு பெறுவதா இல்லையா என நீங்கள் முடிவெடுக்கலாம்

- ஏதாவது மருத்துவ ஆய்வில் பங்குபெற நீங்கள் தகுதிபெற்றால், உங்கள் சம்மதத்தைக் கேட்போம்.
- நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எந்தவோர் ஆய்விலிருந்தும் விலகிக்கொள்ளலாம். நாங்கள் உங்களுக்கு வழங்கும் கவனிப்பு இதனால் பாதிக்கப்படாது.

### உங்கள் கருத்துகளையும் யோசனைகளையும் வரவேற்கிறோம்

- நாங்கள் உங்களது கருத்துகளைக் கேட்டறிய விரும்புகிறோம். நாங்கள் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ள என்ன செய்யமுடியும் என்பதை எங்களிடம் தெரியப்படுத்துங்கள். உங்கள் கருத்துகளைப் பகிர:

  1. எங்களது நோயாளி தொடர்பு அதிகாரியிடம் பேசுங்கள்
  2. எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்
  3. எங்கள் இணையத்தளத்தின் வாயிலாகக் கருத்து தெரிவிக்கும் படிவத்தைச் சமர்ப்பித்திடுங்கள்.

**நாங்கள் எங்களால் முடிந்தவரை உங்களுக்கு சிறந்த கவனிப்பும் சிகிச்சையும் வழங்க உதவ, உங்களிடமும் உங்கள் குடும்பத்தாரிடமும் பின்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்:**

- தேவைப்படும்போது எப்போதும் முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை எங்களுக்கு வழங்குங்கள்
- உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம் குறித்து ஏதேனும் அக்கறைகள் இருந்தால் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
- எங்கள் ஊழியர்களிடமும் மற்ற நோயாளிகளிடமும் மரியாதையாகவும் பணிவன்பாகவும் நடந்துகொள்ளுங்கள்.
- உங்கள் கட்டணங்களை நேரத்துடன் கட்டிவிடுங்கள்.
- எங்கள் பலதுறை மருந்தகத்தின் செயல்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றுங்கள் (எ.கா. பதிவு, செயல்படும் நேரம், நோயாளி பாதுகாப்பு குறித்த வழிகாட்டிகள்).
- எங்கள் பலதுறை மருந்தகத்தின் உடமைகளையும் வசதிகளையும் கவனமாக, அக்கறையோடு பயன்படுத்துங்கள்.
- உங்கள் வீட்டு முகவரி, தொடர்பு எண்கள் அல்லது மின்னஞ்சல் முகவரி மாறினால், எங்களிடம் தெரியப்படுத்துங்கள்.

**ஒன்றிணைந்து, ஆரோக்கியமான சமூகத்தை நம்மால் உருவாக்க முடியும்!**

## மதிப்புமிக்கக் கவனிப்புடன் குடும்ப ஆரோக்கியத்திற்குத் துணைபுரிவோம்.